World Christian Fellowship
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியரின் புத்தகம்

ஆசிரியர்: பவுல் தர்சு பட்டணத்தான், பெற்றோர் யூத குலத்தை சார்ந்தவர்கள். இவர் ரோம குடிமகன் மற்றும் கிரேக்க மொழியில் தேனொழுக பேசக்கொடியவர். கூடாரம் செய்பவர்.

**எழுதிய வருடம்** :

| **நிருபத்தின் பெயர்** | **எழுதிய வருடம்** |
|---|---|
| *1 தெசலோனிக்கேயர்* | *52 கி.பி.* |
| *2 தெசலோனிக்கேயர்* | *52 கி.பி.* |
| *1 கொரிந்தியர்* | *57 கி.பி.* |
| *2 கொரிந்தியர்* | *57 கி.பி.* |
| *கலாத்தியர்* | *55-57 AD* |
| *ரோமர்* | *57 கி.பி.* |
| *எபேசியர்* | *62 கி.பி.* |
| *பிலிப்பியர்* | *62 கி.பி.* |
| *கொலோசெயர்* | *52 கி.பி.* |
| *பிலேமோன்* | *63 கி.பி.* |
| *எபிரேயர்* | *64-65 கி.பி.* |
| *தீத்து* | *64-65 கி.பி.* |
| *1தீமோத்தேயு* | *64-65 கி.பி.* |
| *2 தீமோத்தேயு* | *66-67 கி.பி.* |

***வரலாற்று பின்னணி மற்றும் நோக்கம்:***

***கலாத்தியர் 1:6-7, உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; [7]வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.***

*மேற்கண்ட வசனத்தின் மூலம் பவுல் சபையிலுள்ள பிரச்சனையை கையாளுகிறார் என்பது நமக்கு தெளிவாக தெரிகிறது. மற்றும் இக்கடிதம் சபை மக்களை ஊக்குவிப்பதற்காக சபை போதகர் எழுதிய மற்றொரு கடிதமாக இல்லாமல் மாறாக மதகொள்கைகளையும், பேதம் கற்பிக்கும் முறையையும் பெரும் பிரச்சனையாக கையாளுகிறார் என்று நாம் புரிந்து கொள்ள முடிகிறது.*

*அப்போஸ்தலனாகிய பவுல், ஊழிய பயணத்தின் போது கலாத்தியாவிலே நிறுவிய சபைகளில் பெரும்பாலானோர் யூத விசுவாசிகளும் மற்றும் ஓரளவுக்கு மாற்றப்பட்ட புறஜாதி விசுவாசிகளும் இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவது என்கிற கோட்பாட்டின் கீழ் தாம் போதிக்கிறோமா என்று உறுதிசெய்ய விரும்பினார். அப்போஸ்தலனாகிய பவுல் ரோம சபைக்கு எழுதிய போது, யூத விசுவாசிகளோடு எல்லா விதமான சர்ச்சைகளைக் கையாண்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.. ஆனால், கலாத்தியரிடம் முக்கியமாக, மோசேவினுடைய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினால் ஒருவன் நீதிமானாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார்.*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிரியைகளோடு எதையும் சேர்த்து கொள்வதை பவுல் எதிர்க்கிறார். இயேசு கிறிஸ்துவோடு எதையும் சேர்த்தால் ஒன்றுமில்லாததற்கு சமம் என்று பவுல் எழுதுகிறார்.

யூதர்களின் வலியுறுத்தலின் காரணமாக விசுவாசத்தினால் ஒருவன் நீதிமானாக்கப்படவேண்டுமென்றும் கிறிஸ்துவுக்குள் விசுவாசியானவன் தேவனுக்கு முன்பாக தான் நீதிமானாய் நிற்க வேண்டுமானால் அவன் நியாயப்பிரமாணத்தை கைகொள்ள வேண்டும் என்று கள்ள போதகர்கள் சபைக்குள்ளே நுழைந்து தவறாக போதித்திருக்கிறார்கள். இது இயேசு கிறிஸ்துவிற்காக சந்தோஷமாய் ஊழியம் செய்த விசுவாசிகளின் சுதந்திரத்தை பெரிதும் பாதித்தது.

விருத்தசேதனமில்லாமல் புறஜாதியான ஒருவன் சபையில் அங்கத்தினராக அனுமதிக்க முடியாது என்றும் இது அடிப்படை போதகத்திற்கு புறம்பாக இருக்கிறது என்று யூத அங்கத்தினர்கள் சபையிலுள்ள கொள்கைகளை நிராகரித்தார்கள் என்று பவுல் சபையிலே கண்டறிந்தார். சபை, அடிப்படை கொள்கையை முறையாக ஏற்றிருந்தாலும் யூதர்களில் தொந்தரவு தரும் சிலர் அதினுடைய அணுகுமுறையை தலைகீழாக மாற்ற சபையை கிளப்பி விட்டார்கள். தொந்தரவு செய்தவர்கள் சட்டப்பூர்வமான மனநிலையை கொண்டிருந்ததால், கிறிஸ்துவை தலைமைப்படுத்துவதற்கு பதிலாக யூத மதத்தை அடையாளமாக கொள்ள வேண்டும் என்று சபையை வற்புறுத்தினார்கள்.

உண்மையிலே அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இப்படி ஒரு பலவந்தமான கடிதத்தை எழுத அவசியம் ஏற்பட்டது. இந்நிலையிலிருந்து தள்ளப்பட்டவர்கள் கலாத்தியாவிலே

*வலுவான பிடிப்பினை அடைந்திருக்கிறார்கள் என்று இந்த கடிதம் விளக்கியிருக்கிறது.*

***கலாத்தியர் 5:12: "உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும்.!"***

*எவர்கள் உங்களை கலக்குகிறார்களோ அவர்கள் தாங்களே தேவனுடைய சரீரத்திலிருந்து முழுவதுமாக அவர்களாகவே நீங்க வேண்டும் என்று விரும்புகிறார். ஏனென்றால் இப்படிப்பட்ட சிந்தனையுள்ளவர்களுக்கு தேவனுடைய சபையிலே இடமில்லை.*

*இரட்சிப்பு என்பது ஒரு சில சட்டப்பூர்வமான விதிமுறைகளில் பெற முடியும் என்கிற தவறான எண்ணத்தை கலாத்தியர் நிருபம் எதிர்கொள்கிறது. அதே சமயம் ஒரு விசுவாசி யூத பிரமாணங்களை கைக்கொள்ள வேண்டுமா என்கிற எதிர் விவாதமும் இல்லை.*

*சில விதிகளினால் இரட்சிப்பை பெற முடியும் என்கிற எண்ணமும் மற்றும் இரட்சிப்பை பெற்றவர்கள் கண்டிப்பாக தேவனுடைய விதிகளின் கீழ் வாழ வேண்டும் என்கிற இவைகளுக்கிடையேயான உலக வித்தியாசமும் இருக்கிறது.*

*இந்த புத்தகத்தில் முக்கிய நபர்களாக இருப்பவர்கள் அப்போஸ்தலனாகிய பவுல், பேதுரு பீட்டர், பர்னபா, ஆபிரகாம்,தீத்து,மற்றும் கள்ள போதகர்கள்.*

*இந்த புஸ்தகத்தில் **6** அதிகாரங்களும் **149** வசனங்களும் அடங்கியுள்ளது.*

***சுருக்கமான விளக்கம் :***

*அப்போஸ்தலனாகிய பவுல் இந்த 6 அதிகாரங்களையும் கீழ்கண்ட வரிசையின்படி பிரித்திருக்கிறார்.*

*முதல் இரண்டு அதிகாரங்கள் தனிப்பட்ட காரியங்களை குறிக்கிறது **(1&2)**. அடுத்த இரண்டு அதிகாரங்கள் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் அத்தோடு நியாயப்பிரமாணத்தைப்பற்றியும் குறிக்கிறது **(3&4)**. பின்னர் கடைசி இரண்டு அதிகாரங்கள் பொறுப்போடுகூடிய விசுவாசிகளின் சுதந்திரத்தை குறிக்கிறது **(5&6)**.*

*யூதர்கள் கிறிஸ்துவையும் நியாயப்பிரமாணத்தையும் சேர்த்து கொள்கிறார்கள் அதேசமயம் புறஜாதி விசுவாசிகளும் இயேசு கிறிஸ்துவையும் சுதந்திரத்தையும் சேர்த்து கொள்கிறார்கள். இரண்டுமே தவறு.*

*இரட்சிக்கப்பட்ட யூத விசுவாசிகள், நீதிமானாக்கப்படுவதற்கு ஆரம்ப இடமாயிருந்த மோசேவின் நியாயப்பிரமாணத்திற்கு திரும்பினார்கள். ஆனால் அவர்கள் முக்கிய பிரஜைகளாக மட்டும் இல்லாமல் பேதுருவையும் பர்னபாவையும் தங்களுடைய நன்மைக்காக அவர்கள் பக்கம் இழுத்துகொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள் **(கலாத்தியர் 2:11-13)**. ஆகையால், நீதிமானாக்குதல் மற்றும் அவர்கள் வைக்கும் விசுவாசம் இவை இரண்டும் மோசேவினுடைய நியாயப்பிரமாணத்தை கைகொள்வதினால் எதுவும் பிரயோஜனம் இல்லை என்பதை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களிடம் திரும்ப திரும்ப பேசவேண்டியதாயிருந்தது.*

*ஆகையால் பவுல் நியாயப்பிரமாணத்தையும் கிருபையையும் மறுத்து பேசுகிறார்.*

- *நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை.* ***(2:16)***
- *நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தல்.* ***(2:19)***
- *விசுவாசத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான்* ***(3:6)***
- *நியாயப்பிரமாணம் கடுங்கோபத்தை வருவிக்கும், நீதியையல்ல.* ***(3:10)***
- *கிரியைகளினால் அல்ல அன்பினால் நியாயப்பிரமாணம் நிறைவேறும்.* ***(5:14)***

*ஆகவே, நீங்கள் யூதராக இருந்தால் சிலுவையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்த கிரியைகளோடு எதையும் கூட்டாதீர்கள். மேலும் நீங்கள் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுகிறதினால் தேவனுக்கு முன்பாக எந்த ஒரு சலுகைகளும் இல்லை. உங்களை கிறிஸ்துவினிடத்தில் சேர்ப்பதற்கு நியாயப்பிரமாணம் ஒரு உபாத்தியாய் கொடுக்கப்பட்டது* ***( 3:24).***

*ஆகையால், அப்போஸ்தலனாகிய பவுல் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல் மற்றும் உட்படுத்தி கொள்ளுதல் ஆகிய இவை இரண்டிற்கான வித்தியாசத்தை பற்றியும் நமக்கு சுட்டிக்காட்டுகிறார். சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல் மற்றும் உட்படுத்தி கொள்ளுதல் ஆகிய இவை இரண்டிற்கும் எதிராக பவுல் சம வலிமையோடு வாதிடுகிறார்.*
*சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல் மற்றும் உட்படுத்தி கொள்ளுதல் ஆகிய இவை இரண்டும், வீட்டின் விதிமுறைகளை பெற்றோர் எவ்வாறு கையாளுகிறார்கள்*

என்று ஒப்புமை விளக்கம் தருகிறது. உட்படுத்தில் கொள்ளுதல் என்பது வீட்டில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கடுமையான விதிகளுக்கு கீழ்படிந்தால் மாத்திரமே அவர்களிடம் அன்பு காட்டுகின்றனர். அப்படிப்பட்ட வீடுகளில் காலை முதல் மாலை வரை ஒவ்வொரு அம்சமான வாழ்க்கை முறைக்கும் விதிகள் உண்டு. அதை முறிவுசெய்தால் கடுமையான தண்டனை வழங்கப்படும். அன்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும். கண்டிப்பாக அது உண்மையான அன்பாக இருக்க முடியாது மற்றும் அப்படிப்பட்ட வீடு தொடர்ந்து செயல்படுவதில்லை.

சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல் என்பது வீட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளிடம் அளவில்லாத அன்பை செலுத்துகிறார்கள் ஆனால் அதேசமயம்அவர்கள் பிள்ளைகளிடம் சில நேர்மறையான நடத்தை நிலையை எதிர்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருந்து பிள்ளைகள் நடக்க தவறினால் பெற்றோர்கள் அன்போடு சரி செய்து அவர்களுடைய நடத்தையை மாற்றி கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பிள்ளைகள் எப்பொழுதும் அன்பு செலுத்தப்பட்டு ஒவ்வொரு நாளும் மற்றும் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதிலும் வழி நடத்தப்படுகிறார்கள்.

கிறிஸ்தவம் என்பது ஒரு குடும்பம். அவருடைய பிள்ளைகளின் நடத்தைகளுக்கு அவருடைய நியாயப்பிரமாணங்கள் தான் விதிமுறைகள். அவர் அவருடைய பிளளைகளை அதிகம் நேசிக்கிறார் அதேசமயம் அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்றும் வழி நடத்துகிறார்.

அவருடைய கட்டளைகளின்படி நடக்க நாம் தவறினாலும், ஒருவன் பாவம் செய்தாலும் அதை சரி செய்து நம்முடைய நடத்தைகளை மாற்றும்படி சொல்லுவார். அவருடைய கட்டளைகளை கைககொள்ளுகிறதினால் அவருடைய பிள்ளைகளாகிவிட முடியாது. நாம் கர்த்தருடைய குடும்பத்தில் பிறந்திருக்கிறபடியினாலும் இயேசு கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டபடியினாலும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். தேவன் தம்முடைய பிள்ளைகளை அன்பினால் படைத்து, நன்மை பயக்கும் அவருடைய விதிகளாகிய கட்டளைகளின்படி அவருடைய அன்பினால் நம்மை வழி நடத்துகிறார்.

சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவதால் தேவனுடைய குடும்பம் மற்றும் மாம்சமான குடும்பம் ஆகிய இரண்டும் இயல்பானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்கிறது. எந்த ஒரு அமைதியான சமூகமும் தன்னுடைய குடிமக்கள் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. சட்டதிட்டங்களுக்கு தன்னை கீழ்ப்படுத்த தவறுகிற மற்றும் நிராகரிக்கிற எந்த ஒரு மனுஷனும் குற்றவாளியாயிருக்கிறான்!! மற்றுமல்லாமல் நியாயமாக, இயல்பாக, இறையியலாக நம்பப்படுவது என்னவென்றால் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமக்கள், வீட்டின் அங்கத்தினர்கள் சட்டத்திட்டங்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

அடிமை பெண்ணிற்கும் சுதந்திர பெண்ணிற்கும் கொடுக்கப்பட்ட இரண்டு உடன்படிக்கைகளை பவுல் விளக்குகிறார்.

*விசுவாசத்தின் மூலம் கிருபையினால் நீதிமானாக்கப்படுதல் என்பது ஆவிக்குரிய சுதந்திரத்தினால் உங்களுக்கு கிடைத்தவை என்று தன்னுடைய கடித்ததில் புறஜாதி விசுவாசிகளுக்கு பவுல் எழுதுகிறார். சுதந்திரம் என்பது நமக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்வது அல்ல ஆனால்,*

- *நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் **(5:1)***
- *உங்களுடைய இச்சைகளை தணித்து கொள்வதற்கு ஒருவரிடத்தில் அன்பு செலுத்துவது சந்தர்ப்பம் அல்ல. **(5:13 & 6:7-10)***
- *ஆவியின் கனிகளை பெறுவது **(5:22-23)***

*அதற்காக நீங்கள் பாதுகாப்பான கட்டத்திற்குள் இருக்கிறீர்கள் என்றும் உலக பிரகாரமான பிரச்சனைகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டீர்கள் என்று அர்த்தம் அல்ல மாறாக அப்படிப்பட்ட வாழ்க்கையை நீங்கள் வாழ விரும்பினால் அதிக பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். உங்களுடைய சரீரம் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. **(2:20)***

*மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி ஆவிக்குரிய வாழ்க்கையை வாழவும் நடக்கவும் வேண்டும். ஆவிக்குரியவைகளில் நடக்கும்போது நம்முடைய வாழ்க்கையின் மூலம் வெளிப்படும் ஆவியின் கனிகள் மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்கு ஒரு தெளிவை உண்டாக்கும்.*

***கலாத்தியர் 2:20, "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்."***

*ஒருவேளை பவுல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்கிற விவாதத்தில் வெற்றியடையவில்லை என்றால், உலகத்திற்கு இரட்சிப்பை கொண்டுவருவதற்கு பதிலாக கிறிஸ்தவம் யூத மதத்தின் கீழ் ஒரு பிரிவாகவே இருந்திருக்கும்.*

***இன்றைய வாழ்வுக்கு பயன்பாடுகள்:***

***யோவான் 3:16, தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.***

***எபேசியர் 2:8-9, [8]கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; [9]ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;***

***கலாத்தியர் 3:11, நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது***

***வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. "***

*விசுவாசிகளின் வாழ்க்கை அவர்கள் வைத்த விசுவாசத்தினால் காப்பாற்றப்பட்டவையல்ல மாறாக அவர்கள் விசுவாசத்தில் வாழ்கிற ஒவ்வொரு தருணமே. நமக்குள் இருக்கும் விசுவாசம் நாம் உருவாக்கினதல்ல அது தேவனுடைய பரிபூரணமான ஈவு. அது கிரியைகளினால் அல்ல நம்முடைய கடமையாயிருக்கிறது.*

*கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கிற சந்தோஷத்தையும் விசுவாசத்தையும் காண்பிக்கவேண்டும். ஏனென்றால், அப்பொழுது கிறிஸ்துவினுடைய கிரியைகளை மற்றவர்கள் நம்மில் காண முடியும். நம்முடைய கனிகளினாலே நம்மை அறிய முடியும் என்று இயேசு சொல்லியிருக்கிறார். **(மத்தேயு 7:16)***

*கிறிஸ்தவர்களாயிருக்கிற நாம் விடாமுயற்சியோடு நம்முடைய விசுவாசத்தை கட்டுகிறவர்களாயிருக்க வேண்டும். அப்பொழுது நம்முடைய வாழ்க்கை கிறிஸ்துவை பிரிதிபளிக்கும் மற்றவர்களும் அவரை நம்மில் கண்டு கொள்ள முடியும். **"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி". (மத்தேயு 5:16)***